விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 யாழ்ப்பாணம் | புரட்டாதி 26 ஜுல்ஹஜ் 13 திங்கட்கிழமை | இதழ் 240 12-10-1981

# தீப்பெட்டி இறக்குமதி தடை செய்யப்பட்டது!

(கொழும்பு)

தீப்பெட்டி இறக்குமதி உடனடியாகத் தடை செய்யப்பட்டுள்ளது! உள்ளூரிலுள்ள 3 தீப்பெட்டி உற்பத்தி நிறுவனங்கள் தரமான தீப்பெட்டிகளை உற்பத்தி செய்வதைத் தொடர்ந்து தீப்பெட்டி இறக்குமதி தடைசெய்யப் படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு பதவியேற்ற சமயம் நாட்டில் தீப்பெட்டிக்குத் தட்டுப்பாடு இருந்து ஏற்பட்ட காரணத்தினால் தீப்பெட்டிகளை வெளி நாடுகளிலி இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியது. இதே சமயம் உள்ளூர் உற்

8ம் பக்கம் பார்க்க!!

## ★ ஈழத்தமிழருக்கு எப்படி உதவலாம் என்பதுபற்றி முடிவுசெய்ய

# அனைத்துக் கட்சி மகாநாடு: தமிழக முதல்வர் கூட்டுகிறார்!

## யாழ். நூலகத்துக்கு நூல்கள் வழங்க எம்.ஜி ஆர். ஏற்பாடு!

சென்னை, அக். 11

இலங்கைத்தமிழர் பிரச்னை குறித்து விவாதித்து சாத்தியமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு அனைத்துக்கட்சிகளின் மகாநாடொன்றை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இம்மாதம் பதினெட்டாம் திகதி சென்னையில் கூட்டுகின்றார்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைத் துடைப்பதற்காக தமிழக மக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசிப்பதற்காகவே அனைத்த கட்சிகளின் மகாநாட்டை இம்மாதம் 18-ம் திகதி தாம் கூட்டுவதாக தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இம்மகாநாடு தமிழ்நாடு அரசின் தலைமைச்செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் கடந்த மே மாதம் 31-ம் திகதிமுதல் ஜூன் மாதம் 3-ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வன்செயல்களின் போது ஜூன் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்திற்கு பல அரிய நூல்களை அன்பளிப்பாக அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளிலும் முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் ஈடுபட்டுள்ளார்.

இதன்பொருட்டு தம்மிடமுள்ள நூல்களில் ஒருபிரதியையேனும் தமிழ்நாடு கல்வித் துறைச்செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி தமிழ்நாடு கல்விமான்களையும் எழுத்தாளர்களையும் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கேட்டுள்ளார்.

இம்மாதம் பதினெட்டாம் திகதி நடைபெறும் அனைத்துக்கட்சிகள் மகாநாட்டில் இன்னலுக்குள்ளான இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக மக்கள் எத்தகைய விதத்தில் உதவலாம் என்பது பற்றி தீர்க்கமாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படுவதுடன் வன்செயலின்போது எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்துக்கு அரிய நூல்களை இந்திய மத்திய அரசின் வாயிலாக யாழ். மேயரிடம் கையளிப்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் தெரிவித்தள்ளார். (வெ)

## சவூதியின் இலங்கைத்தூதர் 28-ல் பயணம்

(கொழும்பு)

சவுதி அரேபிய இலங்கை முதல் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாப் ஒ ஆர். எம் தாசிம் இம்மாதம் 28ம் திகதி அங்கு செல்லவிருக்கின்றார். ஏற்கனவே உத்தியோகத்தர் குழு அங்கு சென்றுள்ளது.

அக்குறணையில், இதனையொட்டி நடத்த பாராட்டு விழாவில், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப் மன்சூர் பேசுகையில், ஜனாப் தாசிமின் நியமனம், இந்த அரசு சிறுபான்மையினரிடம் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாகக் கூறினார். மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் ஜனாப் அப்துல்மஜீத்தும் உரையாற்றினார்.

## மீன்பிடித்தொழில் விருத்தி யாழ். மாவட்ட எம். பி.க்களை அமைச்சர் பாராட்டினார்!

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித்தொழிலை விருத்தி செய்வதற்கு யாழ். மாவட்ட எம். பிக்கள் அளித்துள்ள ஒத்துழைப்பு குறித்து கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற கடற்றொழிலாளர் மகாநாடொன்றில் திரு. பெஸ்டஸ் பெரேரா கலந்துகொண்டு உரையாற்றினார்.

இம்மகாநாட்டில் யாழ். அரசாங்க செயலக அதிகாரிகள் உட்பட, யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க

## குட்டிமணி மீதான வழக்கு இன்று விசாரணை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமாரைக் கொலை செய்ததாக குட்டிமணி எனப்படும் செல்வராசா யோகச்சந்திரன் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு இன்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி திரு டியூடர் டி. அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப்பட வுள்ளது.

பொலிஸ் கான்ஸ்டபிள் சிவநேசனை கொலைசெய்ததாக குட்டிமணி, மற்றும் கறுப்பன் எனப்படும் ஞானவேல் ஆகியோர் மீதும் குற்றம் சுமத்தப்பட்ட வழக்கும் இன்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்.

### தலைமன்னார்-ராமேஸ்வரம்

## அதிகாலை மூன்று மணிக்கு நடந்த கப்பல்சேவை

மன்னார்

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்வோரின் தொகை மீண்டும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த வியாழக்கிழமை அதிகாலை மூன்றரை மணிக்கு தலைமன்னார் துறைமுகத்திலிருந்து ராமேஸ்வரத்திற்கு ஒரு மேலதிக கப்பல் சேவை நடத்தப்பட்டது. மேலதிக கப்பலில் 540 பிரயாணிகள் பயணம் செய்தார்கள். அத்தோடு வழமையான கப்பல் சேவையும் கடந்த வியாழக்கிழமை பகல் இரண்டரை மணிக்கு நடைபெற்றது அதேவேளை நிலைமை இவ்வாறிருக்கராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்குவருவதற்கென கப்பலில் இடம் கிடைக்காததால், நூற்றுக்கணக்கான பிரயாணிகள் ராமேஸ்வரத்தில் அடுத்த கப்பலை எதிர்பார்த்திருப்பதாக ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்த பிரயாணிகள் தெரிவித்தனர்.

காலநிலை சீர்கேடு காரணமாக தலைமன்னார் - ராமேஸ்

(8ம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் சேவை ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வடமாநில தனியார் வாகன சேவைச்சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை யாழ். மினிபஸ் நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் யாழ் மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மாநகர ஆணையாளர் திரு. எம். சிவஞானம் யாழ் மாவட்ட சபைத் தலைவர் திரு. க. நடராசா, யாழ். பொலிஸ் அத்தியட்சகர் ஜனாப் மஹத், வ.பி.போ.ச. தலைவர் திரு எஸ். கனகரத்தினம் உட்பட பலர் உரையாற்றுவர்.

இச்சங்கத்தின் நிர்வாகசபை கூட்டம் சங்கத்தலைவர் திரு. ஏ. பி ஏ. வாஸ் தலைமையில் நடைபெறும். இதனைத்தொடர்ந்து முனியப்பர் கோவிலடியிலிருந்து சகல மினிபஸ்களும் விழா நடைபெறும் இடத்துக்கு ஊர்வலமாக வந்து சேரும்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (மா)

சுங்க

ஏல விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 16-10-81 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1. இந்தியாச் சாரங்கள்
2. இந்தியாச் சேலைகள்.

எஸ். எம். ஜே. சேனரட்ண
சுங்க சேகரிப்பாளருக்காக
யாழ். மாவட்டம்
1162

காணவில்லை

எங்களது சீதாலட்சுமி எங்கிருந்தாலும் உடன் வரவும். அப்பா, அம்மா, சாந்தி, பெரியதம்பி, சின்னமாமா, ஜெயா, குஞ்சுத்தம்பி, வவா வருந்துகிறார்கள். காணுபவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வ. நடராசா,
தொழில் நுட்ப உதவியாளர், ஒட்டுசுட்டான். (1215)

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

### மணிவாக்கு

சில சமயக் கிரியைகளைச் செய்து முடித்துவிட்டால் திருவருள் கிடைத்துவிடுமென்ற நம்பிக்கை எல்லா மதங்களிலும் நிலவுகின்றது. உள்ளத்தூய்மைக்கிட மளிக்காத இந்த மூட நம்பிக்கையை ஒழித்துக்கட்ட வேண்டும்.

— வினோபா

# நமது நோக்கு

## ஆசை வார்த்தையா?

நாலு பக்கங்களிலும் மீன்; ஆனால் அது நடுவிலிருக்கும் மக்கள் உணவுக்கு கிடைப்பதில்லையே!

இன்று மீன் விற்கும் நெருப்புவிலைக்கு கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா என்ன நிவாரணம் அளிப்பாரென்பதே அவருடைய யாழ்ப்பாண விஜயத்தில் எழுந்த முக்கிய கேள்வியாகும்.

கடந்த சிலகாலம் இங்கு நிலவியிருந்த அமைதியற்ற சூழ்நிலை காரணமாக இங்கு காலெடுத்துவைக்க முடியாதவர், இப்பகுதியிலும் சிறப்பாக இதன் மீன்பிடி அபிவிருத்தியிலும் ஊக்கம் கொண்டவர்.

இந்நாட்டின் மீன் உற்பத்தியில் யாழ்ப்பாணம் ஆறிலொரு பங்கைத் தருகிறது. எனவே இம்மாவட்டத்தைப் புறக்கணித்தால் நாட்டின் விருத்தியே பாதிக்கப்படுமென கருத்துத் தெரிவிக்கிறார்.

யாழ். மாவட்ட மீன்பிடி அபிவிருத்தித் திட்டம்ஒன்று தனியாக இயங்குவதற்கு பிறநாடொன்றின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

கடந்தகால கசப்பான சம்பவங்களை மறக்கும் திறமை உண்டானாலொழிய யாழ்ப்பாண மக்களுக்கு முன்னேற இடமில்லை; எனவே இன்று அமைச்சர் கூறும் வாக்குறுதி ஆசை வார்த்தையா? அல்லது திட்ட நிறைவுள்ள திருந்தச் செயலா?

அரசாங்கத்தின் பல வாக்குறுதிகளை காற்றில் பறக்கும் பட்டங்கள்போல் பார்த்து இரசித்த யாழ்ப்பாணப் பொதுமக்கள், இன்று அமைச்சரின் பேச்சை அப்படியே விழுங்கிவிட ஆயத்தமாக இருக்கமாட்டார்கள்.

நாட்டின் மீன் உற்பத்தியில் ஆறிலொருபங்கு இங்கு பிடிக்கப்படும்போதும் பொதுமக்கள் உணவில் புரதச் சத்து நிறைந்த மீன் உணவு மருந்துக்கும் கிடைக்க முடியவில்லையென்றால், உற்பத்தி இன்னும் பெருகினாலும் எமக்கு 'நக்குத் தண்ணீர் தான்' என்ற மனச்சோர்வு ஏற்படுவது இயல்பு;

இப்பகுதி மீனின் ஒரு நியாயமான பங்கு இப்பகுதி மக்களுக்கு நியாயமான விலைக்கும் கிடைக்கும் ஏற்பாடு அவசியமானது.

பாவனையாளர்களின் தலையில் இந்தப் பாரிய பொறுப்பைச் சுமத்திவிட்டால், தரகர்களும், ஏற்றுமதியாளர்களும் அவர்களைப் பச்சைக் கூண்டோடே கயிலாயம் அனுப்பிவைப்பார்கள்.

உற்பத்தியும் விநியோகமும் மீனில் மட்டுமல்ல, மரக்கறி வகைகளிலும் யாழ் மாவட்ட மக்களை வாட்டுகின்றன. இதற்கு அரசாங்கத்தின் பாகுபாடுள்ள கொள்கையே காரணமென்று வெங்காயம், மிளகாய் உற்பத்தியாளர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் மாற்றி அமைத்தாலொழிய மக்களின் மனதில் நம்பிக்கை ஊற்றெடுப்பது முடியாத காரியம்.

மீன்பிடித் துறையில் அரும்பெரும்சேவை செய்து வந்த காரைநகர் சீ-நோர் திட்டம் பற்றி அமைச்சரும் அதிகாரிகளும் வழங்கிய கருத்து அரசியல் தந்திரம் நிரம்பி வழியுமாற்போல் தொனிக்கிறது.

திட்டம் எவ்வகையிலும் மூடப்படாதென்பது ஒன்று; மேலதிக ஊழியர்கள் இருப்பதால் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது மற்றது; பாவிக்கப்படாத இயந்திர சாதனங்கள் கொழும்புக்கு ஏற்றப்பட்டது மூன்றாவது.

இவற்றை நோக்குங்கால் இவ்வரிய திட்டத்தைத் திறம்பட நடத்தி பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற திடமான தீர்மானம் இன்னும் பேசப்படவில்லை.

தாழ்வடைந்திருக்கும் இத்தமிழ்ப்பகுதிக்கு உயிர்த்துடிப்பு உண்டுபண்ண வேண்டிய கடமை அரசுக்கு உரியது. எனவே நிறைவேற்றமுடியாத உறுதிமொழிகளைத் தவிர்த்து உருப்படியான அர்த்தமுள்ள அவசிய பணிகளை இன்றே நடத்திமுடிக்க முன்வர வேண்டும்.

அவற்றுள் நம்பிக்கை ஊட்டவல்ல திட்டம். காரைநகர் சீ-நோர் திட்டமென்பது தெளிவான உண்மை.

## சர்வோதயத்தின் குரல்

சமூக ஒற்றுமை சீர்குலைந்து நாடு சின்னாபின்னமாக அமளிப்பட்டு இருக்குங்காலத்தில் சர்வோதயம் என்ற மகத்தான கோட்பாட்டுக்கு இடமேது?

அழிவு வெள்ளம் வடியும் நிலையில் இலங்கை தேசிய சர்வோதய இயக்கத்தின் குரல் சற்றே கேட்குமாப் போல் இருக்கின்றது.

உலகப் புகழ்பெற்ற சர்வோதயத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்ன காலம், இடம் அறிந்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்திருப்பது நல்ல அறிகுறி.

வடபகுதியில் இவருடைய இயக்கத்துக்குப் போதிய ஆதரவு இருந்த காலத்தில் திரு. ஆரியரத்னவின் நடமாட்டம் அதிகரித்திருந்தது. பல ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை எவ்வித பாகுபாடுமின்றி, ஆதரித்தும், தொடக்கியும், நிறைவேற்ற உதவியும் இருந்தது எம்மிற் பலர் அறிந்த விடயம்.

அரசியல் நிலைமையில் தளர்வான, வகுப்புவாத வெடுக்கடித்த பிரசாரங்கள் இவருடைய இயக்கத்தின் மகிமையைமறைத்து வைத்தன. தென்பகுதி மக்களின் பிரதிநிதியேகமான இயக்கமென்ற அளவில் இப்பகுதி மக்கள் நம்பத் தொடங்கிவிட்டனர்.

நாட்டில் நிகழ்ந்த இனக்கலவரங்கள் வன்செயல்கள் மத்தியில் இப்பெருந்தலைவரின் செல்வாக்குத் தலையெடுக்காமலிருந்ததும் -ஏன்- சிங்களத் தலைவர்கள் எவருமே கண்டனம் தெரிவிக்கத் தவறியதும் நாட்டின் துர்ப்பாக்கியம்.

அகில உலகிலும் சிறப்பாக இந்தியாவின் காந்தீயத் தொண்டில் முதன்மை பெற்ற திரு. ஆரியரத்ன எங்கள் பத்திரிகையின் பெரு நண்பனுமாவார்.

அவருடைய வருகையில் பெருமகிழ்ச்சி கொண்டநாம், தெற்கிலிருந்து வந்த தீ இங்கு சாம்பராய், பின்பு சாம்பரிலிருந்து விழித்தெழும் ஒளியாய்த் திகழ அவர் ஆவன செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

# மக்கள் கருத்து

## இந்த மக்களின் துயர் நீங்குமா?

உரும்பராய் ஞானவைரவர் கோவில் வீதியில் சரந்தன் வீதியில் வதியும் உரும்பராய் வாசிகளாகிய நாம் சொல்லொண்ணாக் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றோம்.

சரந்தன் வீதி, ஞானவைரவர் கோவில் வீதியில் தொடங்கி சரந்தன் ஊடாக நீர்வேலி வரை செல்கிறது. இவ்வீதி ஏறத்தாழ மூன்றுமைல் நீளம் உள்ளது. இங்கே மக்கள் தொகை மிகவும் அதிகமாகவுள்ளது. இவ்வீதியில் வாழும் மக்கள், சந்தைகளுக்கும், கோவில்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்வதற்கு இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் இதன் நிலையோ மிகவும் மோசமாகவுள்ளது. பல்லாண்டு காலமாக இவ்வீதியில் பராமரிப்புத் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை.

வீதி முற்றும் ஒட்டையும் உடைசலுமாகக் காட்சியளிக்கிறது. சில இடங்களில் பெரும் கிடங்குகளில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் மக்கள் நடந்து செல்லவோ அன்றி துவிச்சக்கர வண்டியில் செல்லவோ வழியின்றித் திண்டாடுகின்றனர். இதில் மிகவும் வருந்தத்தக்குரிய விஷயம் யாதெனில், அவசர வேளைகளில் நோயாளர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதற்கும் இவ்வீதியைப் பயன்படுத்த முடியாது மக்கள் அவதியுறுகின்றனர். சில சந்தர்ப்பங்களில், செருப்புக்களையும், சப்பாத்துக்களையும் கரங்களில் தாங்கி, சேறு கலந்தநீரூடாக வீதியைத் தாண்டிச் செல்லவேண்டிய சங்கடமும் ஏற்படுகிறது.

கோவிலுக்கு ஏறத்தாழ 50 யார் தூரத்தில் ஒரு குட்டையில் மழைநீர் தேங்கிநிற்கிறது இந்நீர் வெளியிற்செல்ல வெளி வழி இல்லாமையினால் இங்ஙனம் நீர் தேங்கி நிற்கிறது. மழைக்காலம் ஏற்கெனவே தொடங்கிவிட்டமையால், மக்கள் தாங்கொணா அல்லலுறுகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் இவ்வீதியைத் திருத்தி மக்கள் துயர்துடைக்க ஆவனசெய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

அ. அருந்தவநாதன்
உரும்பராய் கிழக்கு.
உரும்பராய்.

## முயற்சிக்கொரு முருகேசபிள்ளை

— நம. சிவப்பிரகாசம் —

முகத்தின் அழகால் அகத்தின் அளவைக் காண்பிக்கும் திறமையுடன் உள்ளத்தின் உயர்வினால் உலக வாழ்க்கையை உன்னதமாக்கும் ஆற்றலும் அமையுமேயானால் அம் மனிதன் செம்மையுடையவன் என்பது உயர்ந்தோர் கூற்று.



முருகேசம்பிள்ளை என்றால் ஒரு முருகேசம்பிள்ளையை முன்னிலைப்படுத்தும் அவ்வளவு பெருமையைத் தேடிக்கொண்டவர் வடமாநில மக்கள் மனதில் திடமாய் இடம்பெற்ற திரு. தியாகராசா முருகேசம்பிள்ளை அவர்களே.

துணிவும் துரிதமும் உத்த அறிவும் ஆற்றலும் தொழில்பட எதையும் எப்பொழுதும், இயற்றி முடிக்க ஆயத்தமாக ஒரு அரச அலுவலாளர் இருந்திருந்திருப்பின் அவர் முருகேசம்பிள்ளைதான்.

தேன் பொந்து திருக்கேதீச்சரம் என்று நாவலர்பெருமான் கண்டுபிடித்தமுன்னுக்குவைத்தெழுந்த புனர் உத்தாரண சபையின் காரியங்கள் உள்ளூர்களில் நேர உழைத்த காரியாதிகாரியும் இவரே.

வள்ளல் இராமநாதன் அவர்கள் கண்ட கனவாம் பரமேஸ்வர பல்கலைக்கழக முயற்சியை ஏனைய அபிமானிகளுடன் நின்று அயராதுழைத்து அப்புனித பரமேஸ்வராக் கல்லூரிட பூமியில் வளாகத்தை அரசினர் அமைக்கப் பலவாறு பணி ஆற்றிய காரிய வீரனும் முருகேசப்பிள்ளையே.

சிறந்த பண்பு, தெளிந்த சிந்தனை, தெய்வ வழிபாடு, பரந்த நோக்கம், பணிபுரியும் பனப்பான்மை இவை யாவும் ஒருங்கமையப்பெற்ற முருகேசம்பிள்ளை அவர்களின் மங்கல மனையாட்சி, இல்லறத்தை நல்லறமென்று உலகில் எடுத்து உரக்க உரைக்கும் காட்சியாயமைந்த சிறப்பே சிறப்பு.

பழம்பெரும் மகிமைவாய்ந்த குலத்தில் உதித்த இளங்குரிசிலாய் மகிழ்வாய்ந்த சுற்றத்தையும் அகன்று விரிந்த நட்பினர் குழாத்தையும், அரசபணி செய்யும் அதேவேளையில் மக்கட் பணியும் ஆற்றி இந்நாட்டினரையும், மதத்து வாழ்ந்த மகிமை இவ்வுலகில் எஞ்ச அவ்வுலகெய்தினார் அமரரான முருகேசபிள்ளை. (க)

### ஒரு கண்ணோட்டம்

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

கடந்த மாதம் 25-ம் திகதி மாலை யாழ். வீரசிங்கம் மண்டபம் மங்களகரமாகப் புதுப்பொலிவுடன் காட்சியளித்தது. அன்றுதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா.

பட்டம்பெறவந்த கலைமாணி, விஞ்ஞானமாணி, முதுமாணிகள், பல்கலைக்கழக உயர் உத்தியோகத்தர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கௌரவ கலாநிதிப் பட்டம்பெறுபவர்கள், பதிவாளர், உபவேந்தர், வேந்தர் ஆகியோர் வீரசிங்கம் மண்டபத்திற்கு ஊர்வலமாக வந்த காட்சி கண்கொள்ளாதிருந்தது. ஏனைய பல்கலைக்கழகங்கள் போலன்றி முற்றுமுழுதாக மாறுபட்டவகையில் மங்கல நிறத்தில் சீருடையணிந்து வந்தமை சிறப்பு அம்சமாகும். பட்டமளிப்பு விழாவன்று அணியும் வழமையான உடையை மாற்றி யாழ். பல்கலைக்கழகம் தனித்துவமாயிருப்பதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஐரோப்பியப்பல்கலைக்கழகங்களைப் பின்பற்றி அணியும் கறுப்புநிற உடையைத் தூக்கியெறிந்து, அந்தச் சம்பிரதாயத்தைத் தகர்த்து எமது பண்பாட்டுக்குரிய உடையணிந்த சிரேஷ்டாவலந்த காட்சியை என்றும் மறக்க முடியாது. வேந்தர் தலைப்பாகை அணிந்து ஆலவட்டம், பட்டுக்குடை மத்தியில் வந்தமை தென்னாசியப் பண்பாட்டைப் பிரதிபலித்தது. மங்கள வாத்தியம் முழங்க குத்துவிளக்கேற்றி பட்டமளிப்பு விழாவினை ஆரம்பித்தமை எமது பண்பாட்டோடு ஒட்டியவையாகும். இந்தப் பட்டமளிப்புவிழாவை ஏற்றுக்கொண்டதன் மூலம் யாழ் வீரசிங்கம் மண்டபம் தன்னைப் பன்மடங்கு உயர்த்திக்கொண்டது.

உபவேந்தர் தமது தலைமை உரையைத் தமிழில்நிகழ்த்திய போது தமிழ் அன்னை பூரிப்படைந்திருப்பாள். உபவேந்தரின் அர்த்தபுஷ்டியான தலைமை உரையைக்கேட்டு மண்டபத்தில் இருந்தவர்கள் ஆனந்தக்கண்ணீர் வடித்ததைக்காணக் கூடியதாயிருந்தது. உபவேந்தர் தமிழில் உரையாற்றியது தமிழன்னைக்குக் கொடுத்த கௌரவமாகும். இதன் மூலம்பட்டமளிப்பு விழா மேலும் ஒருபடி உயர்ந்து நிற்கிறது.

உரையை முடித்த இரண்டு வசனங்கள் ஆங்கிலத்தில் விழித்துப் பேசித் தமது உரையை முடித்தார் உபவேந்தர். பட்டம் பெற உள்ளவர்களை அழைக்கும்போது உபவேந்தர் தமிழில் கூறி அழைக்கத் தவறவில்லை. சுருங்கக்கூறின் எமது பண்பாடு, கலாசாரத்தைப் பேணி நடந்த ஒரு "இந்திர விழா"வென்றே இதனைச் சொல்லத்தோன்றுகிறது. இறக்குமதியான வெளிநாட்டு நாகரிகத்தையும் சம்பிரதாயத்தையும் உடைத்தெறிந்து தமிழ் மக்கள் மத்தியில் விழிப்பையேற்படுத்திய விழாவாக இப்பட்டமளிப்பு விழா திகழ்ந்த அதேவேளை கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றவர்களை முன்னிலைப்படுத்திய பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் தமது குறிப்புக்களைக் கூறியது திருஷ்டி பரிகாரமென்றே சொல்லவேண்டும்.

இக்குறை மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் தவிர்க்கப்படுமென்றே நம்புகிறோம்.

—அராலியூர்க் குரு

## மன்னாரில் சர்க்கரை ஆலை

(மன்னார்)

மன்னாரில் சர்க்கரை ஆலை ஒன்று நிறுவுவதற்கான பரீசீலனையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. கு

# கொத்து, சுண்டு, அளவுகள் தடை செய்யப்பட்டுள்ளன!

(யாழ்ப்பாணம்)

கொத்து, சுண்டு ஆகியவற்றால் அளப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக வியாபாரத் திணைக்கள ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு தெரிவித்துள்ளார்.

### விற்பனைச் சிட்டை

கிலோ அளவைமுறையில் வியாபாரம் செய்யாதவர்கள், விற்கும் பொருட்களுக்கு விற்பனைச் சிட்டை கொடுக்காதவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென்றும்—

மீன், மரக்கறிவகைகள் கூறு போட்டு விற்பனை செய்யக் கூடாதென்றும், கிலோ நிறுவைகளிலேயே இவை நிறுத்து விற்பனை செய்ய வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

வியாபாரிகள் சிலர் விற்பனை செய்யும் பொருட்களுக்கு 'ரசீது' கொடுக்காமல் விடுவதாகப் பாவனையாளர்கள் முறைப்பாடு செய்வதாகத் தெரிவித்த ஆணையாளர், இவ் வியாபாரிகள் கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி இவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்றும் திரு. மார்க்கண்டு தெரிவித்துள்ளார். மா-இ

## நெதர்லாந்து நிலையம் வழங்கும் 'புலமைப்பரிசில்

(கொழும்பு)

நெதர்லாந்து ஹெரோவிக் சுற்றாடல் பொறியியல் நிலையம் மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல் துறை போதனாசிரியர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்க முடிவு செய்துள்ளது

வருடம் 2 புலமைப் பரிசில் வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் இங்குள்ள பொறியியலாளர்களுக்கு ஹெரோவிக் சுற்றாடலில் பயிற்சியளிப்பதற்காகவே இந்த புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

வட ஒல்லாந்திலுள்ள நிலையத்தில் இவர்கள் இறுதியாண்டுப் பட்டப்படிப்பைப் பெறுவார்கள். மொறட்டுவையிலும், இது தொடர்பான ஒரு ஆய்வு கூடம் அமைக்கப்படும். (க)

## உல்லாசப் பிரயாணிகள்: தனியார் வீடுகளில் தங்குவதற்கு அனுமதி

(கொழும்பு)

உல்லாசப் பிரயாணிகள் கொழும்பிலுள்ள தனியார் வீடுகளில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

36 வீடுகளில், 45 அறைகள் உல்லாசப் பிரயாணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. உல்லாச பிரயாணிகள் சபை இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளது.

உல்லாசப் பிரயாணிகளுக்கு 6520 அறைகள் கொண்ட ஹோட்டல்கள் உள்ளன. மேலும் 2010 அறைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பிரதான உல்லாசப்பயண விடுதிகளில் மேலதிகமாக 648 அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## மழை பெய்வதற்கு கொடும்பாவி

(சுழிபுரம்)

சுழிபுரம்பகுதியில் மழை பெய்யவேண்டி கொடும்பாவி இழுக்கப்பட்டது. சகல வீதிகள் தோறும் கொடும்பாவி கொண்டு செல்லப்பட்டது. ஒப்பாரி வைத்து பலத்த சப்தமிட்டு கொடும்பாவியை மக்கள் இழுத்துச் சென்றனர்

காலமழை பெய்யாததினால் நெற்பயிர்கள் எரிந்துபோய் விட்டதாலும், பல நோய்கள் ஏற்பட்டுள்ளதாலும் மழை பெய்யவேண்டி இக்கொடும்பாவி இழுக்கப்பட்டது.

க

# பிரதமர் பிரேமா சிங்கப்பூர் விஜயம்.

சிங்கப்பூர், அக். 11

பிரதமர் ஆர். பிரேமதாசா இன்று 4 நாள் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு சிங்கப்பூருக்கு வரவிருக்கின்றார்.

சிங்கப்பூரில் ஜனாதிபதி செங் பிரதமருக்கு விருந்துபசாரம் ஒன்றை அளிப்பார்

சிங்கப்பூர் இரண்டாவது உதவிப் பிரதமரான திரு. எஸ். இராசரத்தினமும், பிரதமர் பிரேமதாசாவிற்கு விருந்துபசாரம் ஒன்றை அளிப்பார்.

சிங்கப்பூர் துறைமுகத்தையும், உல்லாசப் பிரயாணிகள் பிராந்தியத்தையும், விஞ்ஞான நிலையத்தையும் பிரதமர் பிரேமதாசா பார்வையிடுவார். சிங்கப்பூர் ஸ்தானிகரும், பிரதமருக்கு வரவேற்பளிப்பார். (க)

## துணிவகை விற்பனையில் தாமதமாம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பலநோக்குகூட்டுறவுச் சங்கம் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதி மிக்க புடவைகள், துணிவகைகள் ஆகியவற்றை தனது கிளைச் சங்கங்களுக்கு ஊடாக விற்பனை செய்வதில் தயக்கம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளைச்சங்கங்களில் அடிக்கடி நடைபெற்றுவரும் புடவைத் திருட்டுகளே இதற்குக்காரணமென்று கூறப்படுகிறது.

அண்மைக் காலத்தில் இச்சங்கத்தின் பல்வேறு கிளைகளிலும் கூரை பிரிக்கப்பட்டு விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள புடவைகள், துணிவகைகள் ஆகியன திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இந்தத்துணிவகைகளையும் கிளைகளுக்குவிநியோகம் செய்யப்படும் பட்சத்தில் அவைதிட்டமிட்டுதிருடப்படலாமென்ற அச்சம் காரணமாகவே சங்க நிர்வாகம் இத் துணிவகைகளை கிளைகளுக்கு விற்பனைக்காக வழங்குவதற்கு பின் நிற்பதாகக் கூறப்படுகின்றது.

## மத்திய ரயில் நிலைய கட்டுப்பாட்டு நிலையம்

(கொழும்பு)

கொழும்பிற்கும் பாணந்துறைக்குமிடையில் மத்திய ரயில் நிலைய கட்டுப்பாட்டுநிலையம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதற்காக பெறப்பட்ட உபகரணங்கள் தற்போது இணைக்கப்பட்டுவருகிறது. (க)

## "15 திகதிக்குமுன் பதிவு செய்க"

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல மீன்பிடிப் படகுகளையும், மீன்பிடி வளங்களையும் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்பு பதிவுசெய்து பதிவு இலக்கம் 8-ம் பக்கம் பார்க்க


# A. BAUR & CO. LTD.

(Jaffna Branch)

# ஏ. பவர் அன் கோ லிமிட்டெட்

நிறுவனத்தினரின் யாழ்ப்பாணக் கிளையில்

உற்பத்திப் பொருட்கள்:-

★ விவசாய இரசாயனப் பொருட்கள் ★ தெளி கருவிகள் ★ உர வகைகள்

இறக்குமதிப் பொருட்கள்:-

★ மருந்து வகைகள் (சுவிர்சலாந்து) ★ இயந்திர தெளிகருவிகள்

★ விவசாய கிருமி நாசினிகள்

★ ஒவல்ரின் (Ovaltine) ★ ஓவாமில் (Ovamil)

வினியோகஸ்தர்கள் :-

★ இலங்கை அரச மருந்து கூட்டுத்தாபனம் ★ இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்

★ இலங்கை தோல் கூட்டுத்தாபனம் (D I)

★ **HONDA** மோட்டார் சைக்கிள்கள் ★

இம்மாதம் (ஒக்ரோபர்) 15-ம், திகதிக்குமுன் எம்மிடம் **HONDA** மோட்டார் சைக்கிள்கள் வாங்குவோருக்கு ரூபா 1035/= க்கும் மேலான பெறுமதியுள்ள பொருள்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன் மேலதிக சலுகைகளும் உண்டு.

இலவசப் பொருட்கள்:-

★ நம்பர் பிளேற், ★ ஓராண்டு மோட்டார் சைக்கிளுக்கான வரி,
★ நோலான் தலைக் கவசம், ★ நோலான் தலைக்கவசக் கண்ணாடி,
★ பொருட் பை. ★ பொதி சுமக்கும் இணைப்பு.

(Nolan N/01 Helmet, Nolan Visor, Luggage Carrier, Pannier Bag, Number Plate, and one year Revenue Licence.)

விபரங்கட்கு:

ஏ. பவர் அன் கோ லிமிட் (யாழ்ப்பாண கிளை)
இல. 5, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

A. Baur & Co. Ltd. (Jaffna) Branch
No. 5, Clock Tower Road,
JAFFNA.

T'Phone: 7651, 7156

(2901)

# எகிப்து - இஸ்ரேலிய புதிய உச்சி மகாநாடு

## இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் கலந்து கொள்வார்கள்

ஜெய்ரோ அக். 11

இஸ்ரேலிய பிரதமர் பெகினும் மறைந்த எகிப்து ஜனாதிபதிக்கு பதிலாக தெரிவு செய்யப்படவிருக்கும் புதிய எகிப்து ஜனாதிபதி முபாரக்கும் 3 வார காலத்திற்குள் உச்சி மாநாடொன்றில் கலந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எகிப்தின் வெளி விவகார அமைச்சர் ஜனுப் கமாலும் இஸ்ரேலுக்கு இம்மாதம் பிற்பகுதியில் 3 நாள் விஜய மொன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

இந்த செய்தியை உடனடியாக கெய்ரோ வானொலி உறுதி செய்யவில்லை. (ஏ)

## அமைச்சர்கள் இடைநிறுத்தம்

புதுடில்லி, அக். 11

ஆந்திரப் பிரதேசத்தின் இரண்டு அமைச்சர்கள் இந்திராகாங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு. நாசும், திரைப்படத்துறை அமைச்சர் திரு சந்திரபாபு நாயுடுவும் ஆகிய இருவருமே இடைநிறுத்தப்பட்ட அமைச்சர்களாவர்.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாலேயே இவர்களிருவரும் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ

## மேற்கு ஜெர்மனியில் 2 லட்சம் பேர் ஆர்ப்பாட்டம்

ஜேர்மனி அக். 11

மேற்கு ஜேர்மனி தலைநகரான பொனில் அணு ஆயுத உற்பத்திக்கு எதிராக 2 லட்சம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல தரப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

அஹிம்சை வாதிகளும் பெண்ணிலைவாதிகளும் இடதுசாரிகளும் அரசியல் கலைப்பற்ற மாணவர்களும், அமெரிக்க பேச்சாளர்களும் பிரிட்டிஷ் அணு ஆயுத எதிர்ப்பாளர்களும், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் மத்தியில் பேசிய அமெரிக்க அணு ஆயுத நிபுணர் திரு. வில்லிமார்க்கின் மேற்கு ஜேர்மனியில் 3000க்கு அதிகமான அணு ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

நேட்டோ அந்திலாந்திக் ஒப்பந்த கூட்டணி நாடுகள் 572 ஏவுகணைகளை தயாராக வைத்திருக்க வேண்டும் என்று எடுத்த தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியுள்ளனர்.

டென்மார்க் பாராளுமன்றிற்கு முன்னும், தலைநகருக்கருகிலுள்ள அணுசக்தி நிலையத்தை மூடிவிடவேண்டும் என 20,000 பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த நிலையத்திலுள்ள கதிரியக்கமின்றால் மக்களின் சுகாதாரம் பாதிப்பதுடன் அவர்களின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஏ)

## துறைமுகத்தில் வேலைநிறுத்தம்

சென்னை, அக். 11

தூத்துக்குடி துறைமுகத்தில் ஒருபகுதி ஊழியர் தொடர்ந்து வேலைநிறுத்தத்தால் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த 8 தினங்களாக சரக்கு ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ)



'அம்புஷ்' கிருமிப் பீடைகளிலிருந்து உங்கள் பயிர்களைக் காக்கும்.

மயிர்க்குட்டி, வெட்டுப் புழு, தாவர மூட்டுப்பூச்சி, அந்துப் பூச்சி ஆகியவற்றை 'அம்புஷ்' பாவித்து அழியுங்கள்.

மீண்டும் மீண்டும் தெளிக்கும் தேவையைக் குறைத்து, நீண்ட காலம் கிருமிப் பீடைகளைச் சிறப்பாகக் கட்டுப் படுத்துவதில் 'அம்புஷ்' உத்தரவாதமானது.

விரைந்து செயற்படும் 'அம்புஷ்' பாவித்து உங்கள் வருவாய் [illegible] வழி காணுங்கள்.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352, கொழும்பு.
தொலைபேசி: 28421

TAL 5147

| | | | |
|---|---|---|---|
| நிகர கொள்ளளவு | 50 மி. லீ. | சில்லறை விலை | ரூபா 32-25 |
| ,, ,, | 100 மி. லீ. | ,, ,, | ரூபா 57-40 |
| ,, ,, | 200 மி. லீ. | ,, ,, | ரூபா 108-75 |


### இலங்கைத் தமிழர் நிலை

## தமிழக முதலமைச்சரிடம் நெடுமாறன் விளக்கினார்

சென்னை அக். 11

இலங்கை தமிழர் நிலைபற்றி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை சந்தித்து காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு பி. நெடுமாறன் எடுத்து கூறினார்.

இலங்கையில் சுமார் 1 வார காலம் பல பகுதிகளில் நேரில் விஜயம் செய்த திரு. பி. நெடுமாறன் இங்கு வந்து சேர்ந்ததும் முதலமைச்சரை சந்தித்தார்.

திரு. நெடுமாறன் முதலமைச்சர் சுமார் 3 மணி திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன் பேசினார். (ச)

## 'ஜனத் தொகை கட்டுப்பாடு அவசியம்'

புதுடில்லி, அக். 11

இந்தியாவின் ஜனத்தொகையை கட்டுப்படுத்தாவிட்டால் பொருளாதாரத்திற்கு பெரும் குந்தகம் ஏற்படும் என்று பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி எச்சரித்துள்ளார்.

குடும்பத்தில் 2 வாரகால பிரசாரத்தையொட்டி அவர் பேசுகையில் குடும்பக்கட்டுப்பாடு மிக அவசியம் என்பதை சமீபத்திய ஜனத்தொகை புள்ளிவிபரம் எடுத்துக்காட்டுவதாக கூறினார்.

ஒவ்வொரு வருடமும் ஜனத்தொகை 1 கோடி 30 லட்சமாக அதிகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஏ

## தி. மு. க. போராட்டம் கருணாநிதி விளக்கம்

திருச்சி, அக். 11

தமது கட்சிப்போராட்டம், அ. தி. மு. க. அரசுக்கு எதிரான போராட்டம் என்று நேற்று திருச்சியில் பத்திரிகையாளர் மத்தியில் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கூறினார்.

திருச்சிக்கு விஜயம் செய்த திரு கருணாநிதி தீக்குளிப்புக்கு பலியான மனோகரன் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

திரு கருணாநிதி இக்குடும்பத்தினருக்கு 10,000 ரூபாவை அன்பளிப்பாக வழங்கினார். (ஏ)

### 'இந்திய சோவியத்

## உடன்படிக்கையும் கூட்டுசேரா இயக்கமும் ஒரே நோக்கமுடையவை'

— இந்திய வெளிவிவகார அமைச்சர்

மாஸ்கோ அக். 11

"பரஸ்பர நலன் கோட்பாடும் சமானத்திற்கான பரஸ்பர விருப்பமுமே தேவமான இந்திய - சோவியத் உறவுகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இங்கு தெரிவித்துள்ளார்.

"சமாதானத்திற்கான ஆர்வமும் உலகில் சமாதான லட்சியத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற உறுதியும் தான் 1971 ஆண்டில் இந்திய-சோவியத் ஒப்பந்தம் செய்து கொள்ளக் காரணமாக இருந்தது. உலகத்திலும் குறிப்பாக இந்தியத் துணைக் கண்டத்திலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை முன்னிட்டு சமாதானத்திற்கும் சமாதான சகவாழ்வுக்குமான தங்கள் கடமையை இந்தியாவும், சோவியத் யூனியனும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த நிலையில் ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை அதற்கான ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையாக கருதவேண்டும்" என்று திரு. நரசிம்மராவ் கூறினார்.

இந்திய - சோவியத் நட்புறவு ஒப்பந்தத்தின் நோக்கமும் கூட்டுசேரா இயக்கத்தின் நோக்கமும் ஒரே மாதிரியானவை என்றும் நாடுகளுக்கிடையே நட்புறவையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதே இவற்றின் நோக்கம் என்றும் சுட்டிக் காட்டிய அவர்; "அரசியல் பிரச்சினைகள் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களும், பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய உயர்மட்டப் பேச்சுகளும், இந்த உறவுகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றியுள்ளன" என்று தெரிவித்தார்.

## இலவச கண்சிகிச்சை

சென்னை அக். 11

தஞ்சாவூரில் 4000 ஏழைமக்களுக்கு இலவச கண்சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை தஞ்சை மாவட்ட தலைவர் செய்திருந்தார். (ஏ)

## குண்டுவெடித்து ஒருவர் பலி

லண்டன், அக். 11

லண்டனிலுள்ள ஒரு இராணுவ முகாமுக்கு வெளியில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் மற்றும் 22 பேர் படுகாயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## சூறுவளிக்கு 46 பேர் பலி!

மெக்சிக்கோ, அக். 11

மெக்சிக்கோவின் வட பிராந்தியத்திலுள்ள சினலோவில் ஏற்பட்ட சூறுவளியினால் 46 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூறுவளியினால் 40,000 பேர் வீடுகளை இழந்துள்ளனர். 4 கோடி டாலருக்கு மேலான சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## செயற்குழு உறுப்பினர்

(மண்டைதீவு)

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் அதிபர், திரு பொ. இராசா தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்: திரு பொ. இராசா, செயலாளர்: திரு. த. சந்திரகுமார் பொருளாளர் திருமதி ச. [illegible] மற்றும் பதினொரு பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# 75 வருட வரலாற்றில் முதல் தடவை!

(மன்னார்)

மன்னார் - தாராபுரம் அ மினு மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் எழுபத்தைந்து வருடகால வரலாற்றில், முதல் தடவையாக இப்பாடசாலையில் இருந்து ஒரு மாணவர் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையைச் சேர்ந்த என். மஹ்றூப் என்ற மாணவருக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது. இம்மாணவர் 1980-ம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் விஞ்ஞானம், வர்த்தகம், கலை ஆகிய பாடங்களில் மன்னார் மாவட்டத்திலேயே அதிக புள்ளியான 245 புள்ளிகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## மீன்பிடித்தொழில் விருத்தி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

"எதிர்க்கட்சித்தலைவருடன் கலந்து ஆலோசித்ததன் பின்னரே கடற்றொழில் அபிவிருத்தி சம்பந்தமாக துரித முயற்சிகள்மேற்கொண்டேன். அதன் எதிரொலிதான் இன்று நடைபெற்ற மகாநாடுகள் இப்பிரச்சினைகள் குறித்து ஆராய எம். பி.க்கள் கலந்துகொண்டதற்கு நான் நன்றி கூறுகின்றேன்.

"சிறிய வலைக்காரர் பெரிய வலைக்காரர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எம். பி. க்கள் ஆலோசனை கூறவேண்டும்.

"அயல் நாடுகளில் இருந்து எமது கடற் பகுதிகளில் மீன்பிடிப்பவர்களால் எமது கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக மயிலிட்டி போன்ற பகுதிகளில் உள்ள மீனவர்களே இம்சைப் படுத்தப்படுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு சுமுகமானமுறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணவேண்டும்.

'மீன்பிடித் தொழிலாளர்கள் தங்களின் நன்மை கருதி காப்புறுசெய்து கொள்ளவேண்டும். இக்காப்புறுதித்திட்டத்தால் தொழிலாளர்களின் உயிருக்கும்-வள்ளத்துக்கும் நன்மை ஏற்படும்.

இத்தொழிலால்பாதிப்படையும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பது பற்றியும் ஆராய்ந்துவருகிறேன்.

'சிர்கேடுகளை நிவர்த்திசெய்வதற்கு ஒரு சபை நியமித்துள்ளேன்.' கூட்டுறவுத்துறையின் மூலம் வங்கிகளில் கடன் பெறலாம். வங்கிகளில் கடன் பெற்றவர்கள்திருப்பிக்கொடுக்காததால் மீண்டும் வங்கிகளில் கடன் பெறமுடியாத நிலையிலிருக்கிறார்கள்' என்றார். (மா)

## படகுகளை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தர் சகல மீன்பிடிப்படகுகளின் உரிமையாளர்களையும் கேட்டுள்ளார். இம்மாதம் 15ம் திகதிக்குப் பின்பு பதிவு இலக்கம் எதுவும் பொறிக்கப்படாது மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்படும் படகுகள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மன்னாரில் நவீன சந்தை

(மன்னார்)

மன்னாரில் 40 லட்சம் ரூபா செலவில் நவீன சந்தை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை மேற்கொண்டு வருகின்றார். (கு)

## பயிர்க் காப்புறுதி வழங்கப்படும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதியின் ஒரு பகுதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 30 வீத பயிர் காப்புறுதிப் பணம் வழங்கப்படவுள்ளது. கு

## தீப்பெட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தியாளர்கள் இயந்திர சாதனங்களையும் மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்யவும் அரசு அனுமதித்தது.

இதனைப் பயன்படுத்திய உள்ளூர் உற்பத்தியாளர்கள் இயந்திரங்களையும், மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்து, தரமான தீப்பெட்டிகளை, கூடிய அளவில் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டனர். இதனால் நாட்டில் ஏற்பட்ட தீப்பெட்டி தட்டுப்பாடு குறையத் தொடங்கியதுடன், உள்ளூரில் உற்பத்தியான தீப்பெட்டிகள் விற்பனை அதிகரிக்கத் தொடங்கியது.

உள்ளூரிலுள்ள 3 நிறுவனங்கள் தரமான தீப்பெட்டிகளை உற்பத்திசெய்ததைத் தொடர்ந்து அரசு தீப்பெட்டி இறக்குமதியைத் தடைசெய்துள்ளது. (ம)

## தலைமன்னார்

1-ம் பக்கத் தொடர்ச்சி

வரம் கப்பல்சேவை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் ஜனவரி 3ஆம் திகதிவரை இடைநிறுத்திவைக்கப்படவுள்ளதாலேயே கப்பல் மார்க்கமாக இந்தியா சென்றுவரும் பிரயாணிகளின் தொகை அதிகரித்துள்ளது.

# இப்படியும் நடக்கிறது

கா ரைநகர் பஸ்சாலைக்குரிய பஸ் வண்டி முத்துஐயன் கட்டுகுளம் சென்று திரும்பி, காரைநகர் நோக்கி வந்துகொண்டிருந்தது. அப்போது பஸ்ஸில் ஐந்து பிரயாணிகள் பட்டுமே பிரயாணம் செய்தனர். நாவற்குளி சந்தியடியில் பன்னிரண்டு கைதடி மருத்துவ பீடத்து மாணவர்கள் ஏறினார்கள். பஸ்ஸுக்குள் ருகிங் ஆரம்பமானது.

ஒரு பழைய மாணவன் புதிய மாணவனை நோக்கி, "நீ எழும்பி நில்லடா. C. T. B. பற்றி பேசு" என்றார். புதிய மாணவன் எழுந்து நின்று "C. T. B. மக்களுக்கு நல்ல சேவை ஆற்றுகின்றது" என்றார். ஒரு பழைய மாணவன் குறுக்கிட்டு 'என்னடா C. T. B, இ. போ. ச. என்று தமிழில் சொல்லடா" என்று அடியாக் குறையாகப் பேசினார்.

"சரஸ்வதி பூசை நடக்கிறது பாட்டுப் பாடு" என்றார். ஆயகலைகள் என்ற பாட்டு பாடினார் புதிய மாணவர். பின்னர் ஒரு பழைய மாணவர், "கீறப்பட்ட றெக்கோர்ட் போல பாடு" என்றார். ஒரு சினிமாப் பாட்டு பாடப்பட்டது.

"உன்னைப் பார்க்க கமலஹாசன் போல இருக்கு. நீ கொண்டக்டரிடம் சென்று எனைப்பார்க்க கமலஹாசன் போல இருக்கிறதா என்று கேள்" என்று கட்டளை இடப்பட்டது. கொண்டக்டரிடம் கேட்டபோது கொண்டக்டர் 'திரு திரு'வென்று முழித்தார்! இத்துடன் இன்னும் பல நடந்தது!

(தகவல்: உப தபால் அதிபர் திரு. சி. சந்திரசேகரம்)

—ஊடுருவி

## குளுமாடு குத்தி மரணம்

துணுக்காய்

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள கல்விளான் கிராமவாசியான செல்லையா என்பவர் குளுமாடு குத்திப் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டார்.

இவர் தினமும் தனது வீட்டு ஆடுகளை மேய்த்துவருவது வழக்கமென்றும், சம்பவதினம் ஆடுகளை மேய்ப்பதற்காகப் பாலியாற்றங்கரை சென்று கொண்டிருக்கையில் வெறிகொண்ட குழுமாடு ஒன்று அவரைத் துரத்திச் சென்று கொம்பால் குத்திக்கிழித்துக் குதறியதாகவும், குடல் வெளிவந்த நிலையில் அவர் ஸ்தலத்திலேயே இரத்தவெள்ளத்தில் பலியானதாகவும் இதுபற்றிக் கூறப்படுகிறது.

மாங்குளம் பொலிசாருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டுப் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மரணமான செல்லையா துணுக்காய்ப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்காவலாளியும் 4 பிள்ளைகளின் தந்தையுமாவர். (அ)

## இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலி



தியாகராசா முருகேசபிள்ளை

(உதவி அரசாங்கஅதிபர்)

தோற்றம்: 10-10-1917

மறைவு: 4-10-1979

எங்கள் நினைவுகளில்
உங்கள்
அன்பே ஜீவ மலராகி...
எங்கள் உயிரில் உங்கள்
நினைவே ஜீவ ஊற்றாகி...
எங்கள் வாழ்க்கையில்
உங்கள்
நெறியே ஜீவ ஒளியாகி...
எங்கள் இதயங்களில்
உங்கள்
குரலே ஜீவ ஒலியாகி...
என்றென்றும்
பிரிவின்றி
எம்மோடு
இணைந்திருப்பீர்...

உங்கள் நினைவே வாழ்வாகி நிற்கும்

மனைவி-மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

12, நல்லூர்
குறுக்கு வீதி
யாழ்ப்பாணம்.

1205

## ஈரானில் 82பேர் சுட்டுக்கொலை

தெஹ்ரான் அக். 11

ஈரானின் இஸ்லாமியக் குடியரசிற்கு எதிரான நடவடிக்கைகளிலீடுபட்ட 82 பேர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டனர். (வெ)


## தேவை

FITTERS WITH WELDING EXPERIENCE
WELDERS GRADE 1
STEEL FABRICATORS

மேல் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கு நல்ல அனுபவம்மிக்க வேலையாட்கள் தேவை.

ஐந்து வருட அனுபவம் உள்ளவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாவுக்கு மேலான சம்பளம் வழங்கப்படும்.

கூடுதலான மேலதிக வேலைநேரம் வழங்கப்படும்.

சம்பள உயர்வு காலத்துக்குக்காலமுண்டு.

மனுச்செய்க.

புறே மோட்டேர்ஸ் இன்ஜினியரிங் கொம்பனி லிமிட்டெட்
PROMOTERS ENGINEERING CO. LTD.
834, பருத்தித்துறை வீதி,
நல்லூர்- யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7394- 8006,

இன்றைய உலகின்—
தன்னிகரற்ற தொலைக்காட்சிப் பெட்டிகள்
● நஷனல்—NATIONAL
● சோனி—SONY
வர்ணத் தொலைக்காட்சிக் கருவிகள்
தேர்வுக்கேற்ற பல்வேறு அளவுகளில்
எமது நிறுவனத்தில் விற்பனையாகிறது.
● NATIONAL 20" 13500/-மட்டுமே
● SONY 20" 14750/- மட்டுமே
உங்கள் தேர்வுக்கு
சி. சின்னத்துரை
அன் பிரதர்
39, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 283, 284

ஹோம் பிரென்ஸ் லிமிட்
"HOME MATE"
ஹோம் மேற்
(MADE IN JAPAN)
1/3 ஹோஸ் பவர் — மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும் மின்சார இயந்திரம் விற்பனைக்குண்டு.
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.
விலை ரூ. 1600/-
விபரங்கட்கு:
ஹோம் பிரென்ஸ் லிமிட்,
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8310


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கொற்றவை அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 12-ம் திகதி அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. Registered as a News Paper The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.